ஶ்ரீ ஹரி:

## பூஜ்யஶ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)


வேணு : 6 ஜனவரி 2001 கானம் : 6


## விஷய ஸூசிகை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஶ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 62 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஶ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 4 |
| 4. | வேத கதைகள் - 44 | 7 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 32 | 9 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை - 38 | 13 |
| 7. | ஶ்ரீ குருவாயூரப்பன் - 1 | 16a |
| 8. | வேதபாடசாலைகளின் இன்றைய நிலை - தொடர்ச்சி | 18 |
| 9. | வடுகநம்பியின் ஆசார்ய நிஷ்டை | 20 |
| 10. | ஶ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 65 | 22 |
| 11. | ஶ்ரீ ஸதாஶிவ ப்ரும்மேந்த்ராள் - 2 | 25 |
| 12. | மஹாபாரத கதைகள் - நளோபாக்யானம் - தொடர்ச்சி | 29 |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : தன்யாஸி தாளம் : ஆதி

*பல்லவி*

***பாவமில்லாத பஜனை ஏனோ - ஸாத்வீக***
***பாவமில்லாத பஜனை ஏனோ (பாவமில்லாத)***

*அனுபல்லவி*

***பக்தியில்லாத பஜனை வீணே (பாவமில்லாத)***

*சரணங்கள்*

***ஆர்வமில்லாமல் கர்வமுடன் செய்யும் பஜனை***
***ஆரவாரமுடன் செய்யும் பஜனை***
***அர்த்தத்தைக் குறியாய் கொள்ளும் பஜனை***
***வ்யர்த்தமே ஆகும் அனர்த்தமே விளையும்***
***(பாவமில்லாத)***

***ராக ஞானமும் தேவையில்லை***
***அனுராக புத்தியுடன் கீர்த்தனம் செய்தால் போதும்***
***ராகத்வேஷத்தை விலக்கிடுவீரே***
***ராதாரமணனைப் பாடிடுவீரே (பாவமில்லாத)***

***பாகவதோத்தமர்கள் காட்டிய வழியில்***
***ஆகம வினுதனை ஆடிப்பாடிடுவீர்***
***சாகாத வரமடைந்து சாஶ்வத பதமடைவீர்***
***நோகாமல் முரளீதரன் சொல்வதை செவிமெடுப்பீர்***
***(பாவமில்லாத)***

## மதுரமான மஹனீயர் 62

நாங்கூர் திவ்யதேசங்களில் சிலவற்றை எடுத்து நம் ஸ்வாமிகள் திருப்பணி கைங்கர்யம் செய்து வருவது நாம் அறிந்ததே. அதன் வரிசையில் ஸமீபத்தில் செம்பொன் செய்கோயில், காவளம்பாடி போன்ற திவ்யதேசங்களின் ஸம்ப்ரோக்ஷணம் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. செம்பொன்செய்கோயில் ஸம்ப்ரோக்ஷணத்தை அடுத்த ஒரு பதினைந்து நாளில் காவளம்பாடி ராஜகோபாலஸ்வாமி திருக்கோயில் ஸம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது.

ஒரு ஸமயம் இந்த காவளம்பாடி கோபாலன் காணாமல் போய் பிறகு கண்டெடுக்கப்பட்டான். அப்பொழுது மிக சிறிய அளவில் ஸம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. அதற்குப் பிறகு இப்பொழுதுதான் ஸம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது. ஸம்ப்ரோக்ஷணத்தின் முதல் நாள் பரனூர் மஹாத்மா ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் ஸம்ப்ரோக்ஷணத்தில் கலந்துகொண்டார்கள். திருப்பணி வேலைகள் பார்த்து மிகவும் ஸந்தோஷம் அடைந்தார்கள்.

ஸம்ப்ரோக்ஷணத்திற்கு முதல் நாள் நல்ல புயல் காற்று. எங்கும் நல்ல மழை. அதுவும் சீர்காழியில்தான் மிகவும் அதிகமாக மழை பெய்தது. அத்தகைய சூழ்நிலையிலும் நம் ஸ்வாமிகள் கலங்காமல் இருந்தார்கள். இந்த புயல் காற்று மழையிலும் யாகசாலை பந்தல் ஒன்றும் ஆகவில்லை. யாகசாலைக்குள் மழைஜலம் ஒரு சொட்டுகூட வரவில்லை.

மறுநாள் ஸம்ப்ரோக்ஷண ஸமயத்தில் காற்று, மழை எல்லாம் நின்றுவிட்டது. வானம் தெளிந்து காணப்பட்டது. ஸம்ப்ரோக்ஷணம் எந்த தடையும் இல்லாமல் நன்றாக நடந்தது. அந்த மழையிலும் புயலிலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஸம்ப்ரோக்ஷணத்தில் கலந்துகொண்டு கோபாலனுடைய க்ருபைக்கு பாத்திரமானார்கள்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : பித்ருக்களுக்கு ஆயுதம் எது?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : பித்ருக்களுக்கு சாபம்தான் ஆயுதம்.

*கேள்வி : சாதுர்மாஸ்ய வ்ரதம் எல்லா ஆம்ரமிகளும் அனுஷ்டிக்க வேண்டியதா?*

பதில் : சாதுர்மாஸ்ய வ்ரதம் எல்லா ஆஶ்ரமிகளும் அனுஷ்டிக்க வேண்டியதுதான். முதல் மாதம் காய்கறிகளையும், இரண்டாவது மாதம் தயிரையும், மூன்றாவது மாதம் பாலையும், நான்காவது மாதம் பருப்பு வகைகளையும் சாப்பிடக்கூடாது.

*கேள்வி : சாதுர்மாஸ்யம் அனுஷ்டிக்க வேண்டிய மாதங்களில் ஏதாவது ஒரு மாதம் அதிமாதமாக வந்துவிட்டால், சாதுர்மாஸ்யம் எத்தனை மாதம் அனுஷ்டிக்கவேண்டும்?*

பதில் : ஐந்துமாதங்கள் அனுஷ்டிக்கவேண்டும்.

*கேள்வி : சாதுர்மாஸ்யம் ஐந்து மாதங்களாக வரும்பொழுது முதல் மாதத்தில் தள்ள வேண்டியது என்ன?*

பதில் : முதல் மாதத்தில் எதுவும் தள்ளுபடியல்ல.

*கேள்வி : நான் வெளியூர் செல்லும்பொழுதெல்லாம் என்னுடைய ஸ்வாமியையும் எடுத்துச் செல்கிறேன். அங்கு ஸ்வாமி நைவேத்யத்திற்கு சுத்தமான அன்னம் கிடைக்காதபொழுது என்ன செய்வது?*

பதில் : அன்னத்திற்கு பதிலாக உலர்ந்த த்ராக்ஷையை நிவேதனம் செய்யலாம். உலர்ந்த த்ராக்ஷை அன்னத்திற்குச் ஸமானம் என்று கூறப்பட்டுள்ளது.

*கேள்வி : ஸன்யாஸிகளுக்கு அக்னி ஸம்பந்தமான கார்யங்கள் கூடாது என்கிறார்களே? வீட்டில் ஸன்யாசிகளுடைய படத்திற்குப் பூஜை செய்யும்பொழுது கற்பூரம் காட்டலாமா, கூடாதா?*

பதில் : அவர்களைத் தெய்வமாக நினைத்து உபாஸிப்பதால், கற்பூர ஹாரத்தி செய்வதில் தவறில்லை.

*கேள்வி : ஸ்ரீமத் ராமாயணம், பாகவதம் போன்ற க்ரந்தங்களை யாரிடமாவது உபதேசம் வாங்கிக்கொண்டுதான் பாராயணம் செய்யவேண்டுமா? அல்லது எனக்கு ஸம்ஸ்க்ருதம் தெரியும் என்பதால் நானே பாராயணம் செய்யலாமா?*

பதில் : யாரிடமாவது உபதேசம் வாங்கிக்கொண்டுதான் பாராயணம் செய்யவேண்டும்.

*கேள்வி : என்ன காரணம்?*

பதில் : இதிஹாஸ புராணங்களில், சில கதைகளில் தத்துவங்களை மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டும். சில கதைகளில், தத்துவங்களையும் எடுத்துக் கொள்ளலாம், கதாபாகங்களையும் எடுத்துக் கொள்ளலாம். சில கதைகளில் கதைகளை மட்டும்தான் எடுத்துக் கொள்ளவேண்டும். ஆகவே, இதை ஒரு குருமுகமாக தெரிந்து கொண்டால்தான், அவைகளின் ரஹஸ்யார்த்தங்களை நாம் புரிந்துகொள்ள முடியும்.

*கேள்வி : இதற்குத் தாங்கள் உதாஹரணங்களைக் கூற முடியுமா?*

பதில் : நவநீதசோர லீலையில் கதையை மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும். தயிர் என்றால் என்ன, வெண்ணை என்றால் என்ன, உரல் என்றால் என்ன, உறி என்றால் என்ன என்றெல்லாம் தத்துவங்களை விசாரம் செய்ய ஆரம்பித்தோமானால் இதை ரசிக்கமுடியாது. ஆகவே நவநீதசோரலீலையில் கதையை மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும். பாற்கடலைக் கடைந்த லீலையில் தத்துவங்களையும் எடுத்துக்கொள்ளலாம், கதையையும் எடுத்துக்கொள்ளலாம். ஸ்கந்தனுடைய உற்பத்தி, பகவான் மோஹினி அவதாரமெடுத்தது போன்ற சரித்திரங்களிலெல்லாம் தத்துவங்களை மட்டுமே எடுத்துக் கொள்ளவேண்டும்.

*கேள்வி : பாகவதம், ராமாயணம் போன்ற க்ரந்தங்களை தொடர்ந்து பாராயணம் செய்து வருவதனாலேயே ஸாக்ஷாத்காரம் ஏற்படுமா?*

பதில் : அவசியம் ஸாக்ஷாத்காரம் ஏற்படும். ஏனென்றால் அவையெல்லாம் மந்த்ரபூர்வமான க்ரந்தங்களாக இருப்பதால், பாராயணம் செய்து வருவதனாலேயே ஸாக்ஷாத்காரம் அவசியம் ஏற்படும்.

*கேள்வி : தகாத எண்ணத்துடன் பிற ஸ்த்ரீகளைத் தொட்டால் தலையே வெடித்துவிடும் என்று ப்ரஹ்மாவினால் கொடுக்கப்பட்ட சாபம் ராவணனுக்கு இருக்கிறதே! அப்படியிருக்கும்பொழுது ஸ்ரீவால்மீகி ராமாயணத்தில் ராவணன் ஸீதையைத் தலைமுடியைப் பிடித்துத் தூக்குவதாக வருகிறதே. அப்பொழுது ராவணனுடைய தலை ஏன் வெடிக்கவில்லை?*

பதில் : வால்மீகி ராமாயணத்தில் ராவணனை மஹாதேஜஸ்வியாகவும், இந்த்ரியங்களை அடக்கும் சக்தியுடையவனாகவும், அக்னி ஹோத்ரம் செய்பவனாகவும், பரமேஶ்வரனுடைய பக்தனாகவும் வால்மீகி வர்ணிக்கிறார். ஆகவே ஸீதையை அபஹரிக்கும்பொழுது ராவணன் மனதை அடக்கி ஹ்ருதயத்தில் கெட்ட எண்ணம் இல்லாமல் பார்த்துக்கொண்டுதான் அபஹரித்தான் என்பதாகவே வால்மீகி ராமாயணத்தில் உள்ளது. கெட்ட எண்ணம் இல்லாமல் ஸீதையைத் தொட்டதால் ராவணனுடைய தலை வெடிக்கவில்லை.

*கேள்வி : எந்தப்புராணத்தைப் படித்தாலும் எனக்கு ஏதாவது ஸந்தேகம் வந்துகொண்டே இருக்கிறது. என்ன செய்வது?*

பதில் : நீங்கள் உங்கள் குரு உபதேசம் செய்த நாமத்தை ஶ்ரத்தையுடன் விடாமல் ஜபம் செய்துவந்தால் உங்களுள் ஒரு அதிசய சக்தி விழித்தெழ ஆரம்பிக்கும். அதன் பிறகு, உங்களுடைய எல்லா கேள்விகளுக்கும் விடை தானே தெரியவரும். ஆரம்பத்தில் வரும் கேள்விகளை உதாசீனப்படுத்தி, விடாது ஶ்ரத்தையுடன் ஸாதனையில் ஈடுபடவேண்டும். அனுபவம் ஏற்படாதவரை ஸந்தேகங்கள் இருந்துகொண்டேதான் இருக்கும்.

# வேத கதைகள் - 44

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி

ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்த்ரிகள்

## அக்னி வழிபாடு

தேவர்கள், மனுஷ்யர்கள், பித்ருக்கள் இம்மூவரும் ஒரு கூட்டத்தை சார்ந்தவர்கள். அஸுரர்கள், ராக்ஷஸர்கள், பிசாசுகள் இம்மூவரும் வேறு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். அஸுரர்கள் ராக்ஷஸர்கள் என்ற பிரிவானது தனித்தனி ஜாதியால் ஏற்பட்டது. ஒரு ஸமயம் தேவர்கள் சைன்யத்திற்கும் அஸுரர்கள் சைன்யத்திற்கும் போர் ஏற்பட்டது. அந்தப் போரில் லேசான அடியால் தேவர்கள் உடலில் ரத்தம் வடிந்தது. தேவர்கள் உடலில் அரக்கர்கள் இரவில் ரஹஸ்யமாக வந்து விஷம் முதலிய கடுமையான திரவங்களை ரத்தம் வடியும் இடங்களில் தடவி அதிகமான துன்பத்தை ஏற்படுத்தினர். தாங்கமுடியாத அந்த துன்பத்தால், உடனே தேவர்கள் இறந்தனர். இவ்விதம் இரவு பூராகவும் விஷத்தை தடவி அரக்கர்கள் தேவர்களுக்கு கெடுதலைச் செய்தனர்.

இறந்த தேவர்களுடன் இரவு நீங்கி காலை தோன்றியது. தேவர்கள் அரக்கர்களால் இந்த துன்பம் ஏற்பட்டது என்று அறிந்து அரக்கர்களுக்கு வேண்டியதை அளித்து தேவர்கள் சொன்னபடி செய்பவர்களாக ஆக்கினர். அப்பொழுது வெற்றியில் எங்களுக்கு பங்கு அளித்தால் தேவர்கள் சைன்யத்தில் நாங்களும் சேர்ந்து விடுகிறோம் என்று ராக்ஷஸர்கள் தேவர்களை வேண்டினார்கள். தேவர்களும் அவ்விதமே அளிப்பதாக கூறினார்கள். தேவர்களின் சொல்லை நம்பி அவர்களும் தேவ சைன்யங்களில் புகுந்து கொண்டனர். தங்கள் சைன்யத்தில் புகுந்துகொண்ட ராக்ஷஸர்களின் உதவியால் தேவர்கள் அஸுரர்களை ஜெயித்தார்கள்.

வெற்றி கிடைத்த பிறகு தேவர்கள் தங்கள் சைன்யத்தில் இருந்து ராக்ஷஸர்களை விரட்டிவிட்டனர். அப்பொழுது அந்த

ராக்ஷஸர்கள், தேவர்கள் பொய் சொல்லி தங்களை ஏமாற்றி விட்டார்கள் என்று தீர்மானித்து தேவர்களை அடிப்பதற்காக தேவ சைன்யத்தை சூழ்ந்துகொண்டார்கள். அப்பொழுது தேவர்கள் தங்கள் செயலானது வெற்றி அடைய அக்னியை வேண்டினர்.

அக்னியும், ''எனக்காக ஒரு யாகம் செய்து என்னை மகிழ்வித்தால் உங்களுக்கு உதவி புரிகிறேன்'' என்று கூறினார். தேவர்களும் ஒரு யாகம் செய்தனர். அந்த யாகத்தால் அக்னி நான்கு பக்கங்களிலும் சூழ்ந்து கொண்ட ராக்ஷஸர்களை துன்பப்படுத்தினார். துன்பம் தாங்காமல் ராக்ஷஸர்கள் ஓடிவிட்டனர். தேவர்கள் வெற்றியடைந்தனர். மறுபடியும் அரக்கர்களுக்கும் தேவர்களுக்கும் போர் மூண்டது. அப்பொழுது தேவர்கள் தங்களுக்கு தகுந்த தலைவன் இல்லாததால், போர் புரிய பயந்தனர். பிறகு நன்கு ஆலோசனை செய்தனர். தங்களுக்குள் இந்திரன் நல்ல திறமையுள்ளவன் என்று தீர்மானித்து தங்களுக்கு தலைவனாக இருக்கும்படி வேண்டினர்.

தமக்காக ஒரு யாகம் செய்தால்தான் தலைவனாக இருக்க இந்திரன் ஒப்புக்கொண்டான். அப்பொழுது தேவர்கள் இந்த்ரனுக்காக ஒரு யாகம் செய்து அவனிடம் உள்ள பாபங்களை விலக்கி விரோதியை ஒடுக்கும் தன்மையையும் அதற்குத் தகுந்த திறமையையும் ஏற்படுத்தினர். இந்திரனும் தலைமை ஏற்று அரக்கர்களுடன் போர் செய்து தேவர்களுக்கு வெற்றி அளித்தான். இந்த வரலாற்றினால் விரோதிகளை அவர்களுக்கு வேண்டியதை அளித்து தன் கட்சியில் சேர்த்துக்கொள்ளலாம் என்ற ஒரு நியாயமும் தமக்கு எந்த பயன் வேண்டினாலும் அக்னிதான் அதை அளிக்கிறான், ஆதலால் அக்னி வழிபாடுதான் வெற்றி பெற சிறந்த உபாயம் என்ற பல உண்மைகள் நமக்கு கிடைக்கின்றன.

Our Website has been re-organised. Visit us at http://www.madhuramurali.org to know more about mission activities and satsang events.

The Spiritual Magazine “Madhura Murali” is also available on Web.

# எந்தரோ மஹானுபாவுலு - 32

நிமாயி கேட்டுக் கொண்டதனால் வேறு வழியின்றி திக் விஜயீ பண்டிதர் இஷ்டமின்றி அலங்காரம் பற்றி சிறிது சொல்லிவிட்டு அமைதியாகிவிட்டார். உடனே நிமாயி, ''உங்களுக்கு ஆக்ஷேபணை இல்லை என்றால் நான் இந்த ஶ்லோகத்தின் குண தோஷங்களைப் பற்றிக் கூறுகிறேன்'' என்றார். பண்டிதர், மிதிப்பட்ட ஸர்ப்பம் போல சீறிக்கொண்டு, ''எங்கே, சொல் பார்ப்போம்'' என்றார்.

நிமாயி அழகாகவும் கம்பீரமாகவும் ஶ்லோகத்தின் ஐந்து குணங்களையும் ஐந்து தோஷங்களையும் விரிவாக எடுத்துக் கூறினார். முக்கியமாக அவர் ப்ரயோகித்திருந்த ''பவானிபர்த்து'' என சப்தத்தில் தொனிக்கும் விபரீதமான அர்த்தத்தை பற்றிக் கூறினார். பவஸ்ய பத்னி பவானி. பவானி என்றாலே பவனின் பத்னிதானே! 'பவானிபர்த்து' என்றால் சிவனின் பத்னியின் பதி என்று அர்த்தமாகிறதே, அது வேறு யாரோ என்று அனுமானம் ஆகாதா என்றார்.

கூடியிருந்தோர், ப்ரஹஸ்பதியைப் போல் நிமாயி வாதம் செய்வது கண்டு ஆனந்தமும் ஆச்சர்யமும் அடைந்தனர். கேஶவமுராரி அவமானத்தால் தலைகுனிந்தார். நிமாயியின் ஒவ்வொரு வார்த்தையும் அவரது இதயத்தை ஈட்டி போல் துளைத்தது. அவரது மௌனத்தைப் பார்த்து வித்யார்த்திகள் கைகொட்டிச் சிரித்தனர்.

நிமாயி உடனே அவர்களை அடக்கிவிட்டு, ''பண்டிதரே! நான் பாலகன். ஏதோ துடுக்குத்தனமாக பேசிவிட்டேன். நீங்கள் தவறாக எடுத்துக்கொள்ளாதீர்கள். இரவு ஆகிவிட்டது. நித்யகர்மாக்களை செய்யவேண்டாமா? நாளை சந்திப்போம். உங்களது அழகிய கவிதையைக் கேட்டு நாங்கள் ஆனந்தம் அடைந்தோம். குண தோஷங்கள் ஶ்ருஷ்டியில் எங்கும் உள்ளது. காளிதாஸர், பவபூதி போன்றவர்களின் கவிதைகளிலும்தான் நிறைய தோஷங்கள் உள்ளன. நீங்கள் இந்த விஷயத்தை இத்துடன் மறந்து விடுங்கள்''

என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு தன் சீடர்களுடன் வீடு திரும்பினார்.

அன்று இரவு பண்டிதருக்கு தூக்கமே வரவில்லை. தனக்கு நேர்ந்த அவமானத்தால் மனது உடைந்து போயிருந்தார். நான் எவ்வளவு பாடுபட்டு ஸரஸ்வதி மந்திரம் ஜபித்து தேவியிடம் வரதானம் வாங்கி இருக்கிறேன். இன்று தேவி என்னை இப்படிக் கைவிட்டுவிட்டாளே எனத் தவித்து, மிகவும் தீவிரமாக தேவியின் மந்திரங்களை ஜபிக்கலானார்.

அன்று இரவு தேவி அவரது கனவில் தோன்றி, ''நிமாயியை நீ ஸாதாரண பண்டிதனாக நினைக்காதே. அவர் ஸாக்ஷாத் ஸ்ரீநாராயண ஸ்வரூபன். நரரூபத்திலிருக்கும் ஸ்ரீ ஹரி அவர். கர்வத்தை விட்டு அவரைச் சரண் அடை. உனக்கு மங்களம் உண்டாகும். மோஹம் அழிந்து அஜ்ஞானத்திலிருந்து விடுபடுவாய்'' என்று உபதேசித்தாள்.

காலையில் எழுந்து அவசர அவசரமாக தலைப்பாகையும் பாதரக்ஷையும் இன்றி நிமாயியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார் பண்டிதர். வழியில் அனைவரும் இப்படி எளிமையாக ஆடம்பரம் இன்றி வரும் பண்டிதரைப் பார்த்து ஆச்சர்யமடைந்தனர். கேஶவ முராரி வந்த ஸமயத்தில் நிமாயி கங்காஸ்நானம் முடிந்து வீட்டில் துளஸிக்கு ஜலம் வார்த்துக்கொண்டு இருந்தார். பண்டிதரை இப்படி எளிமையாகக் கண்டதும் நிமாயி ஓடிச் சென்று அவரை ஸ்வாகதம் செய்தார்.

பண்டிதர் உடனே ப்ரபுவின் சரணங்களில் வேரற்ற மரம் போல் விழுந்து நமஸ்கரித்தார். ப்ரபு பரபரப்போடு அவரை எழுப்பி நெஞ்சோடு தழுவிக்கொண்டார். ''சே, சே, மஹராஜ்! நீங்கள் என்ன செய்கிறீர்கள். நான் உங்கள் புத்ரனுக்கு ஸமமானவன். நீங்கள் ஜகத்பூஜ்யர். ஏன் இப்படி செய்து என்னை பாபியாக்குகிறீர்கள். தயவுசெய்து என்னை ஆசீர்வதியுங்கள்'' என்றார்.

தழுதழுத்த குரலில் பண்டிதர், ''ப்ரபோ! கர்வத்தில் வெந்த என்னை இன்னும் தயவுசெய்து துன்புறுத்தாதீர்கள், க்ருபை கூர்ந்து எனக்கு அருள் செய்து என்னை உத்தாரணம் செய்யுங்கள்'' என்று அஞ்சலி செய்து வேண்டிக்கொண்டார். நிமாயி ப்ரபு அவரைக் கைபிடித்து உள்ளே அழைத்துச் சென்று, ''இன்று என் க்ருஹம்

பவித்ரமாயிற்று. என் வித்யை ஸபலமாயிற்று. உங்களைப் போன்ற மஹா புருஷரின் விஜயத்தால் நான் தன்யனானேன்'' என்றார். பண்டிதர் குனிந்த தலை நிமிரவே இல்லை. மௌனமாகவே கண்ணீர் பெருக நின்றார். இதைப் புரிந்துகொண்ட நிமாயி, ''நான் நேற்று வ்யர்த்தமாக உங்களிடம் துடுக்காக வாதம் செய்துவிட்டேன். எனக்கு வெட்கமாக இருக்கிறது என்னை க்ஷமித்துவிடுங்கள்'' என்றார்.

உடனே பண்டிதர், ''நேற்று எனக்கு உங்களைப் பற்றி ஸரஸ்வதி தேவி அனைத்தையும் கூறிவிட்டாள். எனவே நீங்கள் அருள் கூர்ந்து நான் உய்ய வழி கூறுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார். நிமாயி அவரிடம், ''இதென்ன ஸகலமும் படித்து, அறிந்த நீங்கள் இப்படி என்னைக் கேட்கிறீர்களே! உங்களுக்கு எல்லாம் தெரியும். இருந்தும் என்னை கௌரவிக்கத்தான் இப்படிக் கேட்கிறீர்கள். எனவே நான் சொல்கிறேன். மனிதனுக்கு ஒரே கடமை கடவுளை அறிந்து கொள்வதுதான். இறைவனது பாதபத்மங்களில் இடையறாது வணங்கும் ப்ரீதி உண்டாகவேண்டும். ஸம்ஸார போகங்களில் என்ன இருக்கிறது. பகவத்ப்ராப்திக்கு அவை உதவாது. உலகில் உள்ள அனைத்து போகங்களும் இன்று இருந்தால் நாளை இராது. ஒன்றை அனுபவித்ததும் இன்னொன்றின் மீது ஆசை வரும். நிஜமான வஸ்து தேஜோமயமான பகவானின் பாத பத்மங்கள்தான். நமது அனைத்து முயற்சியும் அவற்றை அடைவதற்குத்தான் அமையவேண்டும்'' என்றார்.

திக்விஜயி பண்டிதர், ''எனக்கு இப்போது என்னுடைய படிப்பின் மீதும் அது ஸம்பந்தப்பட்ட வ்யாபாரங்கள் மீதும் வெறுப்பு உண்டாகிவிட்டது. நான் இப்போது என்ன செய்யவேண்டும் என்று கூறுங்கள்'' என்று கேட்டார். ப்ரபு சிரித்துக்கொண்டே, ''உங்களுக்கு இவ்வளவு சீக்கிரம் வைராக்யம் ஏற்பட்டுள்ளது மிகவும் ஆச்சர்யமான விஷயம். ஸ்ரீ ஹரியின் அபார க்ருபையால்தான் இப்படி தங்களிடம் மாற்றம் ஏற்பட்டுள்ளது. நான் இந்த ப்ஃலோகத்தைத்தான் நமது கடமையின் மூல மந்திரமாக கருதுகிறேன்'' என்றார்,

*தர்மம் பஜஸ்வ ஸததம் த்யஜ லோகதர்மான்*
*ஸேவஸ்வ ஸாது புருஷான்ஜஹி காமத்ருஷ்ணான்*
*அன்யஸ்ய தோஷகுண சிந்தனமாஷு த்யக்த்வா*
*ஸேவா கதாரஸமஹோ நிதராம் பிபத்வம்*

(ஸ்ரீமத் பாகவத மஹாத்ம்யம் 4-80)

தர்மத்தை ஆசரனம் செய்யவேண்டும். விஷயவாஸனைகளுடன் கூடிய லோகதர்மத்தை விட்டுவிடவேண்டும். ஸத்புருஷர்களுடன் நிரந்தரமாக ஸங்கம் வைத்துக்கொள்ள வேண்டும். ஹ்ருதயத்திலிருந்து போகங்களின் இச்சைகளை களைந்து எறியவேண்டும். மற்றவர்களின் குணதோஷங்களைப் பற்றிய சிந்தனையை அடியோடு த்யாகம் செய்யவேண்டும். ஸ்ரீ ஹரியின் ஸேவையான கதாரூபமான பானத்தை அருந்தவேண்டும். அவை தான் மனிதனது கடமை என நான் நினைக்கிறேன். இதைத்தவிர உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ, எனக்கு தயவுசெய்து கூறுங்கள்'' என்றார்.

ஸ்ரீமத் பாகவத மஹாத்மியத்தில் வரும் இந்த ஶ்லோகத்தை கேஶவமுராரியும் எத்தனை முறை படித்திருப்பார். இதற்கு எத்தனை வ்யாக்யானம் செய்திருப்பார். ஆனால் இந்த ஶ்லோகத்தின் உண்மையான அர்த்தத்தை இன்று தான் அவர் புரிந்துகொண்டார். அவரது காதுகளில் இந்த ஶ்லோகம் திரும்பித் திரும்பி எதிரொலித்துக்கொண்டே இருந்தது.

ப்ரபுவின் உபதேசத்தை தலைமேல் கொண்டு பண்டிதர் தனது இருப்பிடத்துக்கு வந்தார். தன்னிடமிருந்த யானை, குதிரை மற்றும் ஆடம்பரமான போக வஸ்துக்களை உடனே மக்களிடம் பகிர்ந்து தந்தார். தனது உடன் வந்தவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு பகவத் சிந்தனையில் ஆழ்வதற்காக மிக்க தீவிரமாக ஏகாந்தமாக நடக்க ஆரம்பித்தார்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 38

ஒரு ஸமயம் கரூஷ தேசத்துக்கு அதிபதியான பௌண்ட்ரகன் என்பவன் த்வாரகாதீசனான க்ருஷ்ணனிடம் ஒரு தூதுவனை அனுப்பினான். அந்த தூதுவன் க்ருஷ்ணனிடம், ''ஹே! க்ருஷ்ண! கரூஷாதிபதியான பௌண்ட்ரக மஹாராஜன் தங்களிடம் ஒரு சேதியை கூறியுள்ளார். அது யாதென்றால், ''ஹே க்ருஷ்ண! இந்த லோகத்தில் நாராயணனுடைய அவதாரமான வாஸுதேவன் என்பவன் நானே. நீ பொய்யாக வாஸுதேவன் என்ற பெயரைக் கொண்டுள்ளாய். ஶங்க சக்ரங்களையும் கொண்டுள்ளாய். உன்னைச் சுற்றி ஒரு கூட்டத்தைக் கூட்டிக்கொண்டு ஏமாற்றுகிறாய். இந்த லோகத்தில் நீ உயிருடன் இருக்க விருப்பப்பட்டால் உன்னுடைய சங்கம், சக்ரம் முதலியவற்றை என்னிடம் ஒப்படைத்துவிட்டு என்னை சரணாக அடைந்துவிடு. இல்லையென்றால் என்னுடன் போருக்கு தயாராகு'' என்று தூதுவன் கூறியவுடன் க்ருஷ்ணனுடைய ஸபையில் உள்ள அனைவரும் பெரிதாக சிரித்தனர். உக்ரஸேன மஹாராஜா, ஸாத்யகி முதலியோர் பரிஹாஸம் செய்தனர்.

பிறகு க்ருஷ்ணர் தூதுவனிடம் ஒரு சேதியைக் கூறியனுப்பினார். அதில், ''பௌண்ட்ரக! நீ கர்வத்தினால் எந்த வார்த்தையைக் கூறினாயோ அதன்படி என்னுடைய ஶங்க சக்கரங்களை யுத்தத்தில் உன்னிடம் ப்ரயோகிக்கிறேன். யுத்தத்தில் அடிபட்டவனாக நாய்களிடம் நீ சரணடைவதை நான் பார்க்கிறேன்'' என்று கூறியிருந்தார். தூதுவனும் பௌண்ட்ரகனிடம், க்ருஷ்ணனுடைய சேதியையும் அவர் மிரட்டிய விதத்தையும் முழுவதுமாகக் கூறினான்.

பிறகு க்ருஷ்ணன் யுத்தத்திற்காக காஶீ பட்டிணம் சென்றார். அப்பொழுது பௌண்ட்ரகனும் போருக்குத் தயாரானான். அவனுக்கு உதவுவதற்காக காஶீராஜனும் அவனுக்குப் பின் பெரும்படையுடன் வந்தான். அந்தப் போரில் பௌண்ட்ரகன் க்ருஷ்ணனைப் போலவே வேஷமணிந்திருந்தான். ஶங்கம், சக்கரம் அணிந்தவனாகவும், வனமாலை அணிந்தவனாகவும், ஸ்ரீவத்ஸம், கௌஸ்துபம் முதலியவைகளைத் தரித்தவனாகவும், மஞ்சள் பட்டாடை

அணிந்தவனாகவும், மகர குண்டலங்களை அணிந்தவனாகவும், வேஷமணிந்திருந்தான். நாடகத்தில் வேஷம் போட்டவனைப் போலிருந்த அவனைப் பார்த்து க்ருஷ்ணன் சிரித்தார். பிறகு பெரிய யுத்தம் நடந்தது. அதில் க்ருஷ்ணன் பௌண்ட்ரகனுடையதுவும் காஶீராஜனையும் சைன்யம் முழுவதையும் அழித்தார். பிறகு பௌண்டரகனையும், காஶீராஜனையும் சக்ராயுதத்தால் வதம் செய்தார்.

பௌண்ட்ரகன் இந்த லோகத்தில் பகவானுக்கு எதிரியாக இருந்தாலும் எப்பொழுதுமே பகவானை த்யானம் செய்துகொண்டு இருந்ததால் ஸகல பாபங்களும் நாசமடைந்தவனாய், ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் ஸ்வரூபத்தை நிஜமாகவே அடைந்து, பகவானையே அடைந்தான்.

---


ஸ்ரீ ஹரி:

**பூஜ்ய முரளீதர ஸ்வாமிகளின் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா**

24, நேதாஜிநகர், ஜாபர்கான்பேட்டை
சென்னை - 83

**நாமஸப்தாஹம்**

இடம் : **R.R. ஸபா**, மயிலாப்பூர், சென்னை - 4

தேதி : பிப்ரவரி 26-ந் தேதி முதல் மார்ச் 4-ந் தேதி வரை

நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

“ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥”

அகண்ட நாம ஸங்கீர்த்தனம் நடைபெறும். அனைவரும் இதில் கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

## "வேதபாடசாலைகளின் இன்றைய நிலை"

- தொடர்ச்சி - ஸ்ரீ ஸ்வாமிகள்

ஒன்று குணம் அல்லது தோஷம் என்பதற்கு வேதமே ப்ரமாணம். எந்த ஒரு தர்மமும் ஒரு மஹாத்மாவை பிடித்துக் கொண்டுதான் நிற்கின்றது. ஆகவே, இந்த வேதத்தை உத்தாரணம் செய்ய மத்ஸ்யபகவான் முதற்கொண்டு நம்முடைய காஞ்சி மஹாபெரியவாள் வரை அநேக மஹான்கள் தோன்றி ரக்ஷித்து வருகின்றார்கள். அதன் பயனாக இன்றும் பல இடங்களில் பல பாடசாலைகள் நடந்து வருகின்றன. அநேக பாடசாலைகள் மடாதிபதிகளால் நிர்வாகம் செய்யப்படுகின்றன. பல பாடசாலைகள் தனியார்களால் நிர்வாகம் செய்யப்படுகின்றன.

இன்றைய சூழ்நிலையில் பாடசாலைகள் நடத்துவது என்பது மிகவும் ஒரு சிரமமான கார்யம். ஏன் என்றால் அரசாங்கம் முதற்கொண்டு ஸமூகத்தில் உள்ளவர்கள் வரை பலருக்கும் இதை ஆதரிக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லை. அப்படி இருந்தாலும் பரவாயில்லை. இவைகள் எல்லாம் தேவையில்லாத விஷயங்கள் போன்ற ஒரு அலக்ஷிய போக்கு அவர்களிடம் நிலவுகின்றது. ப்ராஹ்மண ஸமூகத்தை சேர்ந்தவர்கள் பலருக்கும் கூட வேதபாடசாலைகள் போன்றவற்றுக்கு உதவி செய்வதைவிட அநாதை ஆஶ்ரமங்கள், ஆஸ்பத்திரி, கல்வி ஸ்தாபனங்கள் போன்றவற்றிற்கு உதவுவதையே பெரிதும் விரும்புகின்றனர். ஆகவே, ஸமூகத்தில் நிலவும் இன்றைய சூழ்நிலை வேதபாடசாலைகள் நடத்துவதற்கு ஆரோக்யமாக இல்லை.

வேதபாடசாலைகளின் நிர்வாக விஷயத்தை எடுத்துப் பார்த்தோமானால் அதிலும் பல சிரமங்கள் உள்ளன. மடாதிபதிகள் பலர் பல பாடசாலைகளை நடத்தி வந்தாலும், தங்களுடைய நேரத்தை இது விஷயமாக அவர்களுக்கு இருக்கும் பல அலுவல்களுக்கு இடையே கவனிப்பது என்பது மிகவும் சிரமம். அவர்களால் Appoint (நியமனம்) செய்யப்பட்டவர்களும் தனியாக பாடசாலைகள் நடத்தி வரும் சிலருக்கும், ஆரம்பத்தில் இருக்கும் சிரத்தை போகப் போக இருப்பதில்லை.

பாடசாலைகளுக்கு இன்று உபாத்யாயர் கிடைப்பது என்பது அதைவிட மிகவும் சிரமம். ஏன் என்றால் நல்ல படித்த ஒரு வேத

வித்வானுக்கு வைதீகத்திலும், வேத பாராயணத்திலும் ஒரு மாதத்திற்கு எவ்வளவு வருமானம் வருமோ அந்த அளவிற்கு பாடசாலையில் சம்பளமாக கொடுப்பது மிகவும் சிரமம். அவர்கள் உபாத்தியாயராக இருந்துகொண்டே வெளி விஷயங்களுக்கும் போகலாம் என்று சலுகை இருந்தால் அவர்களால் பாடத்தை குறித்த காலத்தில் முடிக்கமுடியாது. ஆகவே யாராவது தியாக புத்தியுடன் பாடசாலைக்கு உபாத்தியாயராக வந்தால்தான் உண்டு. அப்படி வருபவர்கள் இன்று யாரும் இல்லை.

முன்பு, பாடசாலை குழந்தைகள் எல்லோரும் நல்ல ஸம்ஸ்காரமுள்ள வைதீக குடும்பத்தில் இருந்து வந்து அத்யயனம் செய்தனர். ஆனால், இன்றோ யாருக்கு பள்ளி படிப்பு வரவில்லையோ, அவர்கள்தான் பாடசாலையில் படிக்க வருகின்றார்கள். வேறு எதற்கும் வழி இல்லாதவர்கள்தான் பலர் தங்களுடைய குழந்தைகளை பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர். லௌகீக வித்யையை விட வேதவித்யை மிகவும் சிரமம் என்பதை அவர்கள் அறியவில்லை. அப்படி சேரும் குழந்தைகளிடம் நல்ல குணநலன்களும் காணப்படுவது இல்லை. மேலும் அரைகுறையாகப் படித்தவுடன் அவர்கள் வெளியில் வைதீகத்திற்கு கிளம்பி விடுகின்றனர்.

வேதம் படிக்க யாராவது வர மாட்டார்களா என்று ஏங்கியிருக்கின்ற இந்த சூழ்நிலையில் யார் வந்தாலும் எப்படி இருந்தாலும் சேர்த்துக்கொள்ள வேண்டிய நிர்பந்தம் உள்ளது. நிர்வாகிகளுக்கும், உபாத்யாயருக்கும் எந்த பாடசாலைகளிலும், பொதுவாக ஒத்துப்போவது என்பது மிகவும் சிரமம். அதுமாதிரி குழந்தைகளுக்கும் வாத்யாரிடம் ஒரு பூஜ்யதா **பா**வம் இருப்பது இல்லை. ஆகவே நிர்வாகம் செய்பவர்கள், படிக்க அனுப்பும் குழந்தைகளின் பெற்றோர்கள், பாடம் சொல்லும் உபாத்யாயர் இவர்கள் மூவருக்கும் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு த்யாக புத்தியுடன் செயல்பட்டால்தான் பாடசாலைகள் நடப்பதன் முழுப்பயனைப் பெறமுடியும். அப்படியில்லாமல் இப்பொழுது உள்ள ஒரு சூழ்நிலையில், பல பாடசாலைகள் நடந்தாலும் ஒரு பெரிய மாற்றத்தை ஸமுதாயத்தில் இவைகள் எற்படுத்தப் போவதில்லை.

- முற்றும்

# ஸ்ரீ குருவாயூரப்பன்

க்ஷேத்ரத்தின் பெயர் குருபவநபுரம். குருபவநபுரம் என்பது ஸம்ஸ்க்ருதப் பெயராகும். குரு என்பது தேவகுருவான ப்ருஹஸ்பதியைக் குறிக்கும். பவந என்பது வாயுவாகும். ப்ருஹஸ்பதியாலும் வாயுவாலும் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட க்ஷேத்ரமானதால், இது குருபவநபுரமாயிற்று. இதேதான் தமிழில் குரு வாயு ஊர் (குருவாயூர்) என்றாயிற்று. இது கேரள (மலையாள) தேசத்தில் உள்ள திவ்யக்ஷேத்ரம்.

பரசுராமருக்காக கடல் இடம் அளித்த இடமே கேரள தேசம் ஆகும். அங்குள்ள குருவாயூரில் பகவான் ப்ரத்யக்ஷமாக இருக்கின்றார். பேசுந் தெய்வத்தை அங்கு காணலாம். பக்தர்களது துன்பத்தை அழிக்கும் மூர்த்தி, குறைகளை அகற்றும் அத்புத மூர்த்தி, இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் இஷ்ட தேவதை உள்ள ஸ்தலம் குருவாயூர். பற்பல லீலைகளை இப்பொழுதும் செய்யும் பால கோபாலன் நடனம் புரியும் இடம் குருவாயூராகும்.

குருவாயூர் மிகவும் பாவநமான இடமாகும். பலருக்கு பலவகை வரன்களைத் தரும் வரதன் வசிக்கும் இடம். பார்த்த மாத்திரத்தில் மனஸ்சாந்தி அளிக்கும் இடம். க்ருஷ்ணனே பூஜை செய்த மூர்த்தி. ப்ரஹ்மா அர்சித்த அர்ச்சாவதார மூர்த்தி. ஸூதபஸ் ஜநமேஜயன் முதலியவர் ஆராதித்த மூர்த்தி.

தத்தாத்ரேயர் ஒரு ஸமயம், அஸ்தினாபுரம் வந்து, ''ஓ ஜநமேஜய! க்ருஷ்ண பக்தர்களும் பந்துக்களுமான பாண்டவர் வம்சத்திலே பிறந்த நீ குஷ்டரோகத்தால் பீடிக்கப்படுவதைக் காண கஷ்டமாக இருக்கிறது. இந்த கொடும் நோய் உனக்குண்டான காரணத்தையும் அதை அகற்றும் வழியையும் கூறுகின்றேன் கேள்'' என்றார்.

''நீ ஒரு ஸர்ப்ப யாகம் செய்தாயல்லவா? அதில் எத்தனை ஸர்ப்பங்கள் மந்த்ர பலத்தினால் ஓடி வந்து தீயில் வீழ்ந்து உயிர் துறந்தன. அந்த பாபமகல பாரத ஶ்ரவணம் செய்தாய். பாபசேஷம் பாக்கி இருந்து குஷ்டமாக பரிணமித்தது. நீ இதுவரை செய்து வந்த

ராஜ வைத்தியங்களால் அது அகலவில்லை. குருவாயூரப்பனை உபாஸித்து அதனால் நீ நோயை போக்கிக் கொள்'' என்றார்.

ஜநமேஜயன் அதற்கு, ''ஸத்குரோ! அந்த ஊர் எங்குள்ளது? எவரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது? எப்பொழுது அமைந்தது? அங்குள்ள விக்ரஹத்தை யார் அமைத்தார்கள்? அது யாருக்கு என்ன நன்மை புரிந்தது? என்பதை விளக்குங்கள்'' என்றார்.

தத்தாத்ரேயர் அதற்கு, ''மஹாராஜ! ஸ்வயம்புவ மன்வந்தரத்திலே ஸுதபஸ் என்னும் ப்ரஜாபதி பத்னியான ப்ரிஸ்நீ என்பவளுடன் தமக்கு ஸத்புத்ரன் உண்டாக வேண்டுமென்று நாடி கடும் தவம் புரிந்தார். சதுர்முகன் அவர் முன்னே தோன்றி, ''குழந்தாய்! யான் உனக்கொரு க்ருஷ்ண விக்ரஹம் தருகின்றேன். அது எனக்கு கர்மபந்தம் நேராமலிருப்பதற்காக திருமாலால் தரப்பட்டது. அடுத்த ப்ரளயம் வரும்வரை அதை காக்க வேண்டும். நீ அதை பூஜித்து வா, ஸத்புத்ரன் பிறப்பான்'' என அருள் புரிந்தார். அங்ஙனம் அவர்கள் பக்தியுடன் பூஜித்து வந்தனர். வைகுண்டநாதன் பல்லாண்டிற்குப் பிறகு கருடாரூடனாக ப்ரத்யக்ஷமாகி, ''வேண்டிய வரத்தைக் கேள்'' என்றார். அவ்விருவரும் அடியற்ற மரம் போல் அவரடியிலே வீழ்ந்து பணிந்து, ''ஐயனே! வேறென்ன வரம் வேண்டும்? உமதருள் இருந்தால் போதாதோ? ஆயினும் உமக்கு ஸமமான ஸத்புத்ரன் உண்டாக வேண்டுமென ஸங்கல்பம் செய்து தவம் புரிந்தோம்'' என்றனர்.

பகவான் அவர்களிடம், ''எனக்கு ஸமம் வேறுயார் உண்டு? நான் தான் எனக்கு ஸமம். உங்களுக்கு மூன்று முறை புதல்வனாகப் பிறக்கிறேன். பூபாரத்தைக் குறைக்க அஸுரர்களை அடக்க அவனியில் அவதரிக்க எண்ணினேன். நீங்கள் என்னைப் புத்ரனாகவும் பரப்ரும்மமாகவும் கருதி முடிவில் முக்தி பெறுங்கள். அதுவரை இந்த விக்ரஹத்தை வைத்துப் பூஜியுங்கள்'' என்றார்.

அங்ஙனமே அவர்கள் ஆராதித்து வரும்பொழுது ப்ரிஸ்நீ கர்ப்பிணியானாள். நல்ல நாளிலே அரியதோர் குழந்தை பிறந்தது. அதற்கு ப்ரஸ்நிகர்ப்பர் என்றே பெயரிட்டு ஆனந்தித்தனர். அவர் பெரியவனானவுடன் பூமியெல்லாம் ஸஞ்சரித்து தர்ம பரிபாலனம் செய்தார்.

மறுபிறவியிலே ஸுதபஸ்ஸும் ப்ரிஶ்னியும், கஶ்யபராகவும், அதிதியாகவும் தோன்றினார்கள். அப்பொழுது தனது மூத்த புதல்வனான இந்த்ரனது ராஜ்யத்தை மஹாபலி அபஹரித்ததைக் கூறி அதை மறுபடியும் இந்த்ரனுக்கே அளிக்கவல்லதொரு புத்ரன் உண்டாக வேண்டுமென்று வேண்டினாள் அதிதி.

கஶ்யபர் பயோவிரதம் என்பதை அனுஷ்டித்து பத்னியுடன் க்ருஷ்ண விக்ரஹத்தைப் பூஜித்து வந்தார். அச்சமயம் பகவான் வாமனனாகத் தோன்றி மகாபலியிடம் மூன்றடி மண்ணைக் கேட்டு மூவுலகையும் அளந்து இந்த்ரனிடம் ஸ்வர்க்கத்தை அளித்தார்.

மூன்றாவது முறையாக ஸுதபஸ்ஸும் ப்ரிஶ்நியும் வஸுதேவ தேவகியாகத் தோன்றினார்கள். அச்சமயம், அவர்களது குலகுருவான தௌம்யர், அவர்களது துயர் நீங்க அந்த க்ருஷ்ண விக்ரஹத்தைத் தந்து பூஜிக்கும்படி கூறினார். அச்சமயம் பகவான் ஸ்ரீ க்ருஷ்ணனாக அவதரித்தார். பாண்டவர்கள் வ்யாஜமாக வைத்துக்கொண்டு பாரதப்போர் நடத்தினார். தர்மஸ்தாபனம் செய்தார். குசஸ்தலி என்னுமிடத்தில் த்வரகாபுரி என்ற நகரத்தைப் படைத்து பெற்றோர்களுடன் அங்கிருந்து பற்பல அஸுரர்களை அடக்கி தர்மஸ்தாபனம் செய்தார். ஸாதுக்களை ரக்ஷித்தார்'' என்று தத்தாத்ரேயர் கூறினார்.

(தொடரும்)

---

ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹ சதக்ரது மஹோத்ஸவம்**

இடம் : **ஸ்ரீ ரகுநாதாஶ்ரமம்**
ஸ்ரீ ராதாநிவாஸ்
ப்ருந்தாவன் - 281 121
மதுரா (U.P.)

தேதி : மார்ச் 18-ந் தேதி முதல் மார்ச் 25ந் தேதி வரை

Note : வர விரும்புவோர் அவரவர் தாங்களாகவே முன்னதாக Train Ticketகளை Book செய்துகொள்ளவும்.

# வடுக நம்பியின் ஆசார்ய நிஷ்டை

ஆந்த்ரபூர்ணர் என்னும் வடுகநம்பி ஸாளக்ராமம் என்னும் ஊரில் வாழ்ந்து வந்தவர். இவருக்கு ஸாளக்ராம ஐயன் என்னும் பெயர் உண்டு. எம்பெருமானாருடைய நல்ல சீடராய் ஆசார்ய நிஷ்டை கைவரப்பெற்றவர் இவர். எம்பெருமானாரின் பாதுகைகளே இவருக்கு பெருமாளாகும்.

மதுரகவியாழ்வார் சொன்னது போல் தேவுமற்றறியேன் என்று இருந்தவர். ஒரு ஸமயம் எம்பெருமானார், தனது திருவாராதனப் பெருமாளை எழுந்தருளச் செய்யச் சொன்னார். வடுகநம்பியோ, தன்னுடைய திருவாராதனப் பெருமாளான எம்பெருமானாரின் பாதுகைகளை எம்பெருமானாரின் திருவாராதனப் பெருமாளுடன் ஒன்றாக எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்தார். இதைக் கண்ணுற்ற உடையவரோ, ''வடுகா! என்ன செய்தாய்'' என்று கேட்டார். அதற்கு வடுகநம்பியோ, ''உங்கள் பெருமாளைக் காட்டிலும் என் பெருமாளுக்கு என்ன குறை'' என்று சொன்னாராம்.

உடையவர் தன் சிஷ்யர்களுடன் ரங்கநாதனை தரிசிக்கச் செல்வது வழக்கம். பெருமாளுடைய வடிவழகை உடையவர் ஸேவித்துக்கொண்டிருக்கும்பொழுது, உடையவர் வடிவழகை இவர் ஸேவித்துக் கொண்டிருப்பாராம். ஒரு ஸமயம், உடையவர் வடுகநம்பியை நோக்கி, ''பெரிய பெருமாளுடைய திருக்கண்ணழகைப் பாராய்'' என்றார். அதற்கு வடுகநம்பியோ, ''என் அமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'' என்று சொன்னார். உடையவரும் வடுகநம்பியின் ஆசார்ய நிஷ்டையை உகந்து கடாக்ஷித்தார்.

ஒருநாள் உடையவர், பெருமாள் திருவீதி எழுந்தருளி வந்து கொண்டிருந்நதார். அப்பொழுது வீட்டில் வடுகநம்பி எம்பெருமானாருக்கு பால் காய்ச்சிக்கொண்டிருந்தார். உடையவர், வாசலில் இருந்து, ''வடுகா! பெருமாள் வந்திருக்கிறார். ஸேவிக்க வா'' என்று அழைத்தார். அதற்கு வடுகநம்பியோ,'' உம்முடைய

பெருமாளை ஸேவிக்க வந்தால் என்னுடைய பெருமாளுக்கு பால்பொங்கிப் போமே'' என்று கூறினார்.

எம்பெருமானார் தாம் அமுது செய்தருளிய சேஷ ப்ரஸாதம் ப்ரஸாதிக்கும்பொழுது, வடுகநம்பி தன் இரு கைகளாலும் ஏற்றுக்கொண்டு ப்ரஸாதம் அமுது செய்து தன் தலையிலே திருக்கைகளை துடைத்துக்கொள்வார். ஒரு நாள் இதைக் கண்ட எம்பெருமானார், வடுகநம்பியை கோபித்துக்கொண்டார். அதனால் வடுகநம்பி ப்ரஸாதத்தை அமுது செய்தபின் தன் கைகளை தண்ணீரில் சுத்தம் செய்துகொண்டார். மறுநாள் உடையவர், பகவத் ப்ரஸாதத்தை விநியோகிக்க, அதை அமுது செய்த வடுகநம்பி தன் திருக்கை விளக்கினார். இதைக் கண்ணுற்ற உடையவர், ''வடுகா! என்ன காரியம் செய்தாய்?'' என்று அதிர்ச்சியுடன் கேட்க, ''நேற்று தாங்கள் சொன்ன வண்ணம் தான் இன்று செய்தேன்'' என்றார்.

உடையவர் இது கேட்டு, ''வடுகா! உமக்குத் தோற்றோம். பன்முறை தோற்றோம்'' என்றார்.

இத்தகைய ஆசார்ய நிஷ்டையுடன் விளங்கினார் வடுகநம்பி.

---

ஸ்ரீ ஹரி:

**பழைய கூடலூர் திருக்கோயில்கள் கும்பாபிஷேகம்**

4-2-2001 9.00 **மணி முதல்** 10.00 **மணி வரை**

ஸ்ரீ பாலவிநாயகர் திருக்கோவில்
ஸ்ரீ பாலசாஸ்தா திருக்கோவில்
ஸ்ரீ லக்ஷ்மி நாராயண திருக்கோவில்

5-2-2001 9.00 **மணி முதல்** 10.00 **மணி வரை**

ஸ்ரீ காமாக்ஷி அம்பிகா ஸமேத
ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் திருக்கோவில்

நம்ஸ்வாமிகள் ப்ரேரணையால் தர்மகல்பதரு மும்பை ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்களால் திருப்பணி கைங்கர்யம் ஏகதேசமாக செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற இருக்கின்றன. அனைவரும் வருக!

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 65

*சோம்பியாய் சும்மா சுகமுண்டு உறங்கிடிற்*
*சொல்வேன் என்கதி அருணாசலா*

உலகில் அனைத்து மஹாத்மாக்களும் பகவானின் ஒரு அம்சமாகவே இருப்பர். அப்படி அவதரித்து வரும் மஹாத்மாக்களே உத்தமமான குருவாக இருக்கக்கூடியவர்கள். அவர்களால் மட்டுமே பகவானிடம் ஒரு ஜீவனை கொண்டு போய் சேர்க்கமுடியும்.

ஸ்ரீமத் ராமாயணத்தில் இதற்கு உதாரணமாகப் பார்த்தால், ராமர் சீதையை பிரிந்த பின், சுக்ரீவனால் ஏவப்பட்ட பல வானரங்கள் சீதையை பல திசைகளிலும் தேடிக் கிளம்ப, ஹனுமாரிடம் மட்டும் பகவான் ராமர், கணையாழியைக் கொடுத்து, ஸீதையிடம் சேர்ப்பிக்கச் சொல்கிறார். இதன் அர்த்தம் என்னவென்றால், ஜீவனை தேடிச் செல்லும் குருவானவர், பகவானால் அனுப்பி வைக்கப்பட்டவராக இருக்கவேண்டும். ஹனுமார் தவிர வேறு யாரும் சீதையை காணவுமில்லை.

பூரணமான ப்ரஹ்மம்தான் பலவிதமான நாமரூபங்களாக மாறி உள்ளது. நமது பகவான் ரமண மஹரிஷிகளிடம் வந்த அவருடைய பல பக்தர்கள், அவரை பலவிதமாய் தரிசனம் செய்துள்ளனர். அநேகர் அவரை ஸுப்ரமண்ய ஸ்வாமியாகவும், அருணாசலேஶ்வரராகவும், தேவியாகவும் தர்சனம் செய்துள்ளனர். இதற்கு ஆதாரங்களும் உள்ளது. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், பலவிதமான நாமரூபங்களைக் கொண்ட தெய்வங்களாக, ஒரே ப்ரஹ்மம்தான் மாறி உள்ளது.

ஒருவர் கடைக்கு சென்றார். அவர் தங்கச்சங்கிலி வாங்கும் எண்ணம் கொண்டிருந்தார். ஆதலால், சங்கிலி வாங்கி வந்தார். இன்னும் ஒருவர் ஜிமிக்கி வாங்கச் சென்றார். அவருக்கு சங்கிலியில் இஷ்டமில்லை. அவர் ஜிமிக்கியையே வாங்கி வந்தார்.

மற்றுமொருவர் சென்றார். அவருக்கு ஜிமிக்கி, சங்கிலி இரண்டிலும் விருப்பமில்லை. அவருக்கு வளையலிலே விருப்பம். வளையல் வாங்கி வந்தார். மூவரும் ஓரிடத்தில் இவற்றை வைத்துவிட்டு, உறங்கச் சென்றனர்.

இரவு திருடன் வந்தான். திருடன், ''இது சங்கிலி, அதனால் இது வேண்டாம்,'' என்று தள்ளவில்லை. அது போல் இது ஜிமிக்கி, இது வளையல் என்று தள்ளவில்லை. அவன் எல்லாவற்றையும் தூக்கிக்கொண்டு ஓடிப்போய்விட்டான். வாங்கி வைத்திருந்தவர்களுக்கு ரூபத்தில் ஆசை. திருடனுக்கு வஸ்துவில் ஆசை. இவர்களுக்கு ரூபமே நோக்கம். திருடனுக்கு ரூபத்திற்கு அதிஷ்டானமான தங்கமே குறி.

எப்படி தங்கமே வளையல், ஜிமிக்கி, சங்கிலி என்று ஆகி உள்ளதோ, அதே போல்தான் ஒரே ப்ரஹ்மம், பல்வேறு நாம ரூபங்களை கொண்டிருக்கிறது. பக்தனுக்கு நாம, ரூபங்களில் ஆசை. வேதாந்திக்கு அதிஷ்டானமான ப்ரஹ்மத்தில் ஆசை.

பகவான், ஸுப்ரமண்ய ஸ்வாமியின் அம்சம் என்று சொல்ல பல ஆதாரங்கள் உள்ளன. ஸனகர், ஸனத்குமாரர், ஸனந்தனர், ஸனாதனர் எனும் நால்வரும் மஹரிஷிகள். அதில் ஸனத்குமாரர் என்பவர் மிகப்பெரிய ப்ரும்மநிஷ்டர். அவர் மிகப்பெரிய ஞான ஸ்திதியை அடைந்திருந்தார். அவருடைய ஞான நிலையைக் கேட்டு பலரும் அவரை வந்து தரிசனம் செய்யவேண்டும் என்று ஆர்வம் கொண்டு, தரிசனம் செய்து வந்தனர்.

ஸாக்ஷாத் கைலாசபதியான பரமேஶ்வரனுக்கும் இவரைப் பார்க்கவேண்டும் என்று ஆசை வந்தது. குழந்தையாக இருக்கிறாராமே, ஞானியாக இருக்கிறாராமே, ப்ரும்மநிஷ்டராமே என்றெல்லாம் கேள்விப்பட்டு ஆச்சரியமடைந்து, அவரை தரிசனம் செய்யச் சென்றார். பார்த்தவுடன், பரமேஶ்வரனுக்கு ஸந்தோஷம். இந்த குழந்தைக்கு ஏதாவது வரம் தர வேண்டும் என்று ஆசைப்பட்டார். உடனே, குழந்தையைப் பார்த்து, உனக்கு என்ன வரம் வேண்டும்? என்று கேட்டார்.

அந்த குழந்தை தைரியமாகச் சொல்லியது, ''உங்களுக்கு ஏதாவது வரம் வேண்டும் என்றால் கேளுங்கள். நான் உங்களுக்கு வரம் தருகிறேன்'' என்று. பரமேஶ்வரன் ஆச்சரியப்பட்டுப் போனார். இவ்வளவு ஆச்சரியமாக பதில் சொல்லும் இந்த குழந்தை, வரம் தர எண்ணும்பொழுது, நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணி, ''நீ எனக்கு புத்ரனாக பிறக்கவேண்டும்'' என்று வரம் கேட்டார். குழந்தை ஞானியாக இருந்ததினால், பரமேஶ்வரன் அப்படி ஒரு வரம் கேட்டார். குழந்தை உடனே, ''நான் உங்களுக்கு வரம் தருகிறேன் என்று சொல்லி விட்டேனே ஒழிய, எனக்கு மறுபடி ஒரு கர்ப்பவாசமிருந்து, பிறப்பு எடுக்க இஷ்டமில்லை. ஆனால், உங்களுக்கு கொடுத்த வாக்கை ஸத்தியமாக்குவேன்'' என்று சொல்லியது.

அந்த குழந்தையான ஸனத்குமாரர், பரமேஶ்வனின் நெற்றிப் பொட்டு வழியாக ஸுப்ரமண்யஸ்வாமியாக வெளிவந்தார். "Energy cannot be destroyed" ''சக்தியை முற்றிலும் அழிக்க முடியாது'' என்கிறோம். அது போலவே, இதே நெற்றிக்கண்ணைக் கொண்டு, பரமேஶ்வரன் மன்மதனை எரித்தார். மன்மதனின் 'அழகு' எனும் சக்தியே இப்பொழுது, முருகன் எனும் வடிவாய் அதே நெற்றிக்கண் வழியாக வெளிப்பட்டது. அதனால்தான் 'முருகன்' எனும் பதத்திற்கு தமிழில் அழகு எனும் அர்த்தம் உண்டு. ஸனத்குமாரர்தான் ஜோதி ஸ்வரூபமான ஸுப்ரமண்ய ஸ்வாமி ஆவார்.

ஸுப்ரமண்யஸ்வாமியின் அம்ஶமாய் உலகில் அவதரிக்கும் மஹாத்மாக்கள் அனைவருடைய முடிவும் ஜோதியில்தான் இருக்கும்.

(தொடரும்)

**அறிவிப்பு**

நமது மிஷன் சார்பில் ஜூலை '95 முதல் ''மதுரமுரளி'' தெய்வீக மாதப் பத்திரிகை வெளிவருகின்றது. இதில் அனைவரும் சந்தாதாரர்களாக சேர்ந்து பயனடைய கேட்டுக்கொள்கின்றோம்.

தனிப்ரதி ரூ.5/-, உள்நாடு : ஆண்டு சந்தா ரூ. 60/-,
ஆயுள் சந்தா ரூ. 750/-,

# ஸதாஶிவ ப்ரும்மேந்திராள் - 2

மிகவும் சுட்டியாக இருந்த சிவராமக்ருஷ்ணனை ஸோமசுந்தர தீக்ஷிதர் தகுந்த ஆசாரியரிடம் சேர்க்க எண்ணினார். மிகப்பெரிய பண்டிதர்களை எல்லாம் அக்காலத்தில் ஒரு ராஜா, திருவிசநல்லூர் எனும் கும்பகோணத்திற்கு அடுத்து உள்ள க்ஷேத்ரத்தில் ஆதரித்து வந்தான்.

சிவராமக்ருஷ்ணன் அங்கு தக்கதொரு பண்டிதரிடம் வ்யாகரணம், ந்யாயம் போன்ற சாஸ்த்ரங்களை குறைவின்றி கற்றான். லோகப்ரஸித்தரான ஸ்ரீ ராமபத்ர தீக்ஷிதரும், மஹாபாஷ்யம் கோபாலக்ருஷ்ண சாஸ்த்ரிகளும் சிவராமக்ருஷ்ணனுடன் கற்றவர்களே. சிவராமக்ருஷ்ணன் நன்கு பயின்று, பெரிய வித்வான் ஆனான். ஆனால், சிவராமக்ருஷ்ணன் வந்த காரியம் வித்வானாக அல்லவே? ஆதலால், அவன் மனம், கற்றதால் பெரியதொரு ஸந்தோஷத்தை அடையவில்லை.

இக்காலத்தில் பரமேஶ்வரனே உரு எடுத்து வந்தது போல் விளங்கி வந்த ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாளிடம் சிவராமக்ருஷ்ணனுக்கு ஸ்நேஹம் உண்டாயிற்று. அப்பொழுது சிவராமக்ருஷ்ணனின் வயது பதினெட்டு. கல்வி முடிந்தபின் சிவராமக்ருஷ்ணன் மதுரை திரும்பினான்.

வித்வானான மகனைக் கண்டு, தந்தை மகிழ்வுற்றார். சிவராமக்ருஷ்ணனுக்கு பால்ய விவாஹம் நடைபெற்றிருந்தது. மகன் தகுந்த வயது அடைந்திருந்தது கண்டு தந்தை, தகுந்த நாள் பார்த்து அவனுடைய மனைவியை வரவழைத்தார்.

சிவராமக்ருஷ்ணன் கல்வி பயின்ற காலங்களில் எத்தகைய மனப்பக்குவம் கொண்டிருந்தான் என்பது, அவனுடன் கற்றிருந்தவர் அறிந்ததே. வெறும் சாஸ்த்ர விசாரத்தினால் அவன் மனம் திருப்தியாகவில்லை. நிஜமான வாழ்க்கையின் ஸாரத்தையே அவன் மனம் நாடியது. அவன் அதற்காக தகுந்த குருவை அடைய

உத்தேசித்திருந்தான். கல்வி முடிந்த பிறகோ, கேட்கவே வேண்டாம். ஸதா அவன் இத்தகைய எண்ணங்களிலே இருந்தான். இத்தகைய ஸமயத்தில் அவனது தந்தை வேறு, அவனுக்கு இல்லற வாழ்க்கையை அமைக்க திட்டமிட்டது, சிவராமக்ருஷ்ணன் துறவு மேற்கொள்ள ஹேதுவானது.

மனைவி திடீரென்று வீட்டிற்கு வந்ததன் காரணமறியாத சிவராமக்ருஷ்ணன் என்ன விஷயம் என்று தந்தையிடம் கேட்டான். விஷயத்தை ஒருவாறாக அறிந்தான். அவனது உறவினர்களும், பந்துக்களும் வேறு வந்திருந்தனர். அன்று ஏதோ சடங்குகள் நடந்து கொண்டிருந்தபடியால், போஜனத்திற்கு தாமதமாகியது. சிவராமக்ருஷ்ணனுக்கு நல்ல பசி? அன்னம் கேட்டால், பொறுக்கச் சொல்லிவிட்டனர். இவன் சொல்லை அங்கு கேட்பாரில்லை. சிவராமக்ருஷ்ணனின் மனம் தள்ளப்பட்டதால், அது மேலும் வாழ்க்கையின் ஸாரமின்மையையே எண்ணியது.

''மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து 'அய்யோ' அடியேன் அலையத் தகுமோ'' என அருணகிரிநாதர் கந்தரனுபூதியில் குறிப்பிடுவது போல், அவனுக்கு இல்லற வாழ்க்கை வேப்பங்காய் போல் கசந்தது. மேலும் அங்கு தொடர்ந்து இருப்பதால், இருண்ட குகைக்குள் சிறைப்படுவதுபோல் உணர்ந்தான் அவன்.

ஸமர்த்த ராமதாஸரின் சரித்திரத்தில் மணமாகும் காலத்தில், 'ஸாவ்தான்' என்றனர். அதற்கு ஜாக்கிரதை என்று அர்த்தம். வழக்கமாக குறிப்பிடப்படும் சொல் அது. அது அவரது சிந்தனையைத் தூண்டி, அவரை ஸந்யாசியாக செய்தது. இங்கோ சிவராமக்ருஷ்ணனின் மனமே அந்த ஜாக்கிரதையை செய்தது. அல்லது இறைவனே இவ்வாறு தகுந்த காலத்தில் அவருக்கு உணர்த்தினான் போலும்.

சாகாத வாழ்க்கை வாழ ஆசைப்பட்டான் சிவராமக்ருஷ்ணன். லக்ஷ்யம் எங்கு உள்ளது என்று அவனுக்கு அப்பொழுது தெரியாது. ஆனால் ஸத்தியத்தை தேடிச் செல்ல முடிவெடுத்தான். ஓசைப்படாமல்

வீட்டைவிட்டு வெளியேறினான். தனது காரியம் அவனுக்கு முக்கியமானபடியால், இறைவன் வகுத்த திட்டப்படி, யாருக்கும் ஸந்தேகம் வராதவாறு வெளியேறினான்.

சத்தியமான பொருளையே அவன் மனம் நாடி இருந்தபடியால், அவனுக்கு வைராக்யம் ஸ்வபாவமாகவே இருந்தது. ஆதலால், அவன் மனம் சலிப்பும், ஸஞ்சலமும் அடையாமலிருந்தது. மாறாக உற்சாகத்துடனேயே இருந்தான். விவேகம் எனும் வாள் அவனிடமிருந்தபடியால் அவன் லக்ஷ்யத்தில் மட்டுமே குறியாயிருந்தான். ஆதலால், தனக்கு ஆத்மஞானத்தை உபதேசிக்கக் கூடிய ஒரு தகுந்த குருவை அண்டினான்.

இவனது பிறந்த வீட்டைப் பற்றி இனி இங்கு பேசுவதில் யாதொரு ப்ரயோஜனமுமில்லை. வழக்கமாக எங்கும் என்ன நடக்குமோ, அங்கும் அதுவே நடந்தது. இம்மாதிரி ஸத்யத்தை தேடி அலையும் புருஷர்கள் இருக்கும்பொழுது, அவர்களுக்காகவே கடவுள் தகுந்த குருநாதரை நியமித்துவிடுகிறார். குருவும் அத்தகைய சீடனை மிகுந்த பிரியமுடன் வரவேற்று, ஆசீர்வதிக்கிறார். ஏனென்றால் குருவுக்கும் அத்தகைய சீடனால் பெருமை. ஸ்வாமி விவேகானந்தர் வருவதற்காக ஸ்ரீ ராமக்ருஷ்ணர் காத்திருந்தார். விவேகானந்தரும், ராமக்ருஷ்ணர் அவரிடம் வைத்திருந்த அன்புக்கும், மதிப்புக்கும் தகுந்த பாத்திரம் கொண்டவராகவே இருந்தார். அவரின் பிற்காலங்களும் இதை நிரூபிக்கின்றன. ஸ்வாமி விவேகானந்தரால் ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸருக்கு பெருமைதானே?

பல இடங்களில் அலைந்த சிவராமக்ருஷ்ணன், இறைவன் திருவுள்ளப்படி, காஞ்சீபுரத்தில் காமகோடி பீடாதிபதிகளாய் அப்பொழுது இருந்த பரமஶிவேந்திராள் எனும் மஹாத்மாவை சரணடைந்தான். அவர் இவனை அன்போடு அரவணைத்து, நடந்த வ்ருத்தாந்தங்களை அறிந்து, ஸன்யாஸ தீக்ஷை கொடுத்து, ‘ஸதாஶிவேந்திர ஸரஸ்வதி’ எனும் ஆஸ்ரமத்துக்கு ஏற்ற பெயரையும் கொடுத்தார்.

குருவிடம் வேதாந்த பாடமும், யோகாப்யாசமும், பழகி, அப்யசித்த ஸதாஶிவேந்திரருக்கு தர்க்கம் செய்வதில் மட்டும் சிறிது ஆசை இருந்தது. பகவானும் இதையே சாக்காக வைத்துக்கொண்டு இவருக்கு அருள்புரிய நினைத்தான்.

ஸதாஶிவ ப்ரும்மேந்திரர் பல நூல்களை இயற்றினார். பண்டிதர்களை எப்பொழுதும் வாதுக்கிழுத்து தோற்கடித்துக் கொண்டே இருப்பார். எந்த பண்டிதரிடமும், ப்ரும்மத்திற்கு விளக்கம் கேட்பார். விளக்கம் சொல்லும் பண்டிதரை சரியாக மட்டம் தட்டி, அனுப்பி விடுவார். அக்கேள்விக்கு பதில் கூற முடியாமல் முழிக்கும் பண்டிதருக்கு மிகுந்த மரியாதை செய்து அனுப்புவார். இந்த செய்கை எல்லாம் குருநாதரை எட்டியது. தனது ப்ரிய சீடனுக்கு இருந்த சிறிய திரையை குருநாதர் விலக்க எண்ணினார்.

கோபம் கொள்வது போல் பாசாங்கு கொண்டு, ''ஸதாஶிவம்! உன் வாய் மூடாதோ?'' என்று கேட்டார். அவ்வளவுதான். மன, வாக்கு, காயங்களை முழுவதும் குருவிற்கு அர்ப்பணித்திருந்த ஸதாஶிவப்ரும்மேந்திரருக்கு அது மிகவும் வருத்தமாகப் போய், அவர் மௌனியாகிவிட்டார். மௌனி என்றால் சுத்த மௌனியானார். மேலும் அவருக்கு அது, ஆத்மஸாதனைக்கு அனுகூலமாய் அமைந்தது.

ஒரு ஸமயம் அவ்வாறிருந்தபொழுது, திடீரென அவர் ஸகலத்தையும் உதறிவிட்டு ஓடலானார். அப்பெரியார் அடைந்த நிலை வார்த்தைகளால் விவரிக்கும் தன்மை கொண்டதா? அருணகிரிநாதர் இதையே, ''எனது யானும் வேறாகி, எவரும் யாதும் தானாகி' எனும் அத்வைத சுகானுபவமாக சொல்கிறார். அத்தகைய மெய்ஞானத்தை அடைந்து ஸதாஶிவப்ரும்மேந்திரர் உண்மையிலேயே ஸதாஶிவமானார். அவருடைய திவ்யசரித்திரம் மேலும் பல அதிசயங்களடங்கியது. அதை அடுத்துவரும் இதழ்களில் பார்ப்போம்.

(தொடரும்)

**- பாலு**

# மஹாபாரத கதைகள்

— **நளோபாக்யானம்** (தொடர்ச்சி)

பின் நல்லதொரு நாளில், தமயந்திக்கு ஸ்வயம்வரம் நடந்தது. பலநாட்டு அரசர்கள் அங்கு ஸிம்மாஸனங்களில் உட்கார்ந்திருந்தனர். நளமஹாராஜனும் நன்கு அலங்கரித்தவண்ணமாய் ஸ்வயம்வர மண்டபத்துள் நுழைந்தான். நுழைந்தது ஒரு நளன் அல்ல! ஐந்து நளன்கள் ஸ்வயம்வர மண்டபத்துள் நுழைந்தனர். தேவர்கள் நால்வரும் நளனைப் போலவே வேடமிட்டு வந்தனர். தமயந்திக்கு இவ்வாறு பெரிய சோதனை வைத்தனர்.

தமயந்தி ஸ்வயம்வர மண்டபத்துள் நுழைந்தவுடன், மிகுந்த ஆச்சரியத்திற்குள்ளானாள். யார் நளன் என்று அறியாது, மதிமயங்கினாள். எவ்வாறு உண்மை நளனை அறிவது என்று நன்கு ஆலோசித்தாள். பின்பு தெய்வத்தை நினைத்து தேறியவளாகி, தேவர்களும், நளனுமிருந்த திசையை நோக்கி, மிகவும் மனமுருகி ப்ரார்த்தித்தாள். ''நளனே எனது பதி'' என்று நான் முடிவு செய்துவிட்டிருக்கிறபடியால், தேவர்கள் எனக்கு க்ருபை கூர்ந்து, நான் நளமஹாராஜர் மீது கொண்டிருக்கும் பக்தி ஸத்தியமானால், எனக்கு உண்மை நளனை காட்டியருள வேண்டும் என்று வேண்டினாள்.

தேவர்கள் அவளுடைய உத்தமமான பதிவ்ரதா எண்ணத்தை அறிந்து, மிகவும் ஆச்சரியமடைந்தனர். பின்னர் அவளுக்கு உண்மை நளனை அறியும் வண்ணம், ஞானமும், திருஷ்டியும் அளித்தனர். அதன்படியே தமயந்தி நளனை அறிவது லகுவானது.

தேவர்கள் அணிந்திருந்த மாலைகள் அனைத்தும் வாடாமலிருந்ததை தமயந்தி கண்டாள். நளன் அணிந்திருந்த மாலையோ லேசாக வாடி இருந்ததைக் கண்டாள். தேவர்களின் பாதங்கள் நிலத்தில் படாமலும், மேலும் அவர்கள் சரீரத்தில் வியர்வை இல்லாமலும் இருந்தது. உண்மை நளனுக்கு அத்தகைய

குறிகளில்லை. தேவர்கள் இமை கொட்டாமலிருந்தனர். நளனுக்கோ, இமை மனிதர்கள்போல் கொட்டிய வண்ணமிருந்தது. இத்தகைய அடையாளங்களால், நளனை மிகவும் நன்கு அறிந்த தமயந்தி, தேவர்களுக்கு மனதாலேயே நன்றி தெரிவித்து, நாணமுடன் உண்மை நளனுக்கு மாலையிட்டாள்.

நளன் தமயந்தியைப் பார்த்து, ''தேவர்கள் முன்னிலையில் நீ என்னை வரித்தமையால், என் உடம்பில் உயிர் உள்ளவரை நான் உன்னையே சார்ந்திருப்பேன்'' என்றான். கண்ணீருடன், மகிழ்வாக தமயந்தி கைகூப்பி நின்றாள். அரசர்களனைவரும் இந்த ஆச்சரியங்களைக் கண்டு, வழக்கமாக இதுமாதிரி வைபவங்களில் வரும் சச்சரவு போல் சண்டையிடாமல் (த்ரௌபதி ஸ்வயம்வரத்தில் கூட சண்டை நடந்தது) நளன்-தமயந்தி தம்பதிகளை வாழ்த்திச் சென்றனர்.

நளனை தமயந்தி வரித்தவுடன், தேவர்களனைவரும் மனமகிழ்ந்து நளனுக்கு எட்டு வரன்களை கொடுத்தார்கள். இந்திரன் ஸத்கதியையும், நளன் செய்யும் யாகத்தில் இந்திரனை நேரில் பார்ப்பதுமான வரமும் அளித்தான். அக்னியானவர் நளன் விரும்புமிடத்தில் தான் தோன்றுவதாகவும், தன் போன்ற ஒளியுள்ள லோகங்களையும் கொடுத்தார். யமதர்மராஜனோ நளனுக்கு தர்மத்தில் நிஷ்டையையும், நளனால் பக்குவம் செய்யப்பட்ட எந்த அன்னமும் சுவை மிகுந்திருக்கும் என்றும் வரம் கொடுத்தார். வருணன் மணமிகுந்த மாலைகளையும், நளன் விரும்பிய இடத்தில் ஜலத்தின் உற்பத்தியையும் அளித்தான். இவ்விதம் வரங்களை அளித்துவிட்டு தேவர்கள் ஸ்வர்க்கம் சென்றனர்.

பிறகு, தமயந்திக்கும், நளனுக்கும் முறைப்படி விமரிசையாக விவாஹம் நடந்தது. சிறிது காலம் கழித்து, நளன் தன் நகரத்திற்கு தமயந்தியுடன் சென்று மகிழ்ந்திருந்தான். அவனுக்கு இந்திரசேனன் எனும் மகனும், இந்திரசேனை எனும் பெண்ணும் பிறந்தனர். தர்மத்தில் நிஷ்டையுடன், ப்ரஜைகளை மேலாக பரிபாலித்து வந்தான்.

தேவர்கள் நால்வரும் ஸ்வர்க்கம் திரும்பும் வழியில் சனியையும், கலியையும் பார்த்தனர். இந்திரன் கலியைப் பார்த்து எங்கு செல்கிறாய் என்று வினவினான். கலி, த்வாபரனுடன் தான் தமயந்தியின் ஸ்வயம்வரத்திற்கு சென்று அவளை மணமுடிக்கப் போவதாக தெரிவித்தான். இந்திரன் நகைத்து, தமயந்தியால் நளன் எனும் மஹாத்மா வரிக்கப்பட்டான். நீ போவது வீண் என்றான்.

இதைக் கேட்டவுடன் கலி சினமுற்றான். தேவர்களான நாமிருக்கையில், நமது முன்னிலையில் ஒரு மனிதனை பதியாக வரித்த தமயந்திக்கு பெரிய தண்டனை தருவதே நியாயம் என்று சொன்னான். அதற்கு முனைவதாகவும் சொன்னான். தனது நண்பனான த்வாபரனையும் இதில் துணைக்கு அழைத்தான்.

இந்திரன் அதைக் கேட்டு, மிகக் கடுமையாக கலியை எச்சரித்தான். ''நான்கு வேதங்களை முழுவதாக அத்யயனம் செய்தவன், யாகங்கள் மூலம் தேவர்களை சரிவர திருப்தி செய்பவன், ஸத்யன், தர்மாத்மா, தயையும், சாந்தியும், தவமும், ஞானமும் உடையவன் என்றெல்லாம் நளனின் பெருமைகளைச் சொல்லி, அவனை பகைக்கும் நீ, அவனுக்கு துக்கத்தை கொடுக்க நினைத்தால், நீ கடுமையான துன்பத்துக்குள்ளாவாய். இது நிச்சயம். தேவராஜனான நான் சொல்கிறேன் கேள். இது விஷயத்தில் மனதைச் செலுத்தாதே'' என்றான். ஆனால் கலி கேட்கவில்லை.

(தொடரும்)

**- பாலு**